| Headline | Wan Junaidi: Sterner measures needed to stop illegal factories | | |
|---|---|---|---|
| MediaTitle | Tamil Nesan (Sunday) | | |
| Date | 09 Oct 2016 | Color | Black/white |
| Section | News | Circulation | 55,000 |
| Page No | 4 | Readership | 210,000 |
| Language | Tamil | ArticleSize | 168 cm² |
| Journalist | NULL | AdValue | RM 489 |
| Frequency | Daily | PR Value | RM 1,466 |



# சட்ட விரோதத் தொழிற்சாலைகள் மூடப்பட வேண்டும்

## டத்தோஸ்ரீ வான் ஜூனாய்டி வலியுறுத்து

கோலாலம்பூர், அக்.9-

நாடு முழுவதும் ஆறுகளின் அருகே செயல்படும் சட்டவிரோதத் தொழிற்சாலைகள் உடனடியாக மூடப்பட வேண்டும் என்று இயற்கை வள மற்றும் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் டத்தோஸ்ரீ டாக்டர் வான் ஜூனாய்டி துவாங்கு ஜஃபார் வலியுறுத்தினார்.



இதன் பிறகு ஆறுகளின் அருகே தொழிற்சாலைகளை நியமித்தல், கழிவுகளைக் கொட்டும் இடமாக ஆறுகளைப் பயன்படுத்துவதை நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று மலேசிய வன ஆய்வுக் கழகத்தின் (பிரிம்) 31ஆவது ஆண்டை முன்னிட்டு 2016 வன ஆய்வுக் கழகச் சட்டத்தை அறிமுகப்படுத்திய பின்னர் செமிஞ்ஞி 'Hitech' தொழிற்சாலைப் பகுதியிலிருந்து வெளியேறும் கழிவுகளால் சுங்கை செமிஞ்ஞி ஆறு மோசமான தூய்மைக்கேட்டினால் பாதிக்கப்பட்டிருப்பது குறித்து செய்தியாளர்களிடம் வான் ஜூனாய்டி கருத்துரைத்தார். இதனிடையே, இந்த 2016 வன ஆய்வுக் க்ழகச் சட்டத்தை கடந்த 1ஆம் தேதி அமல்படுத்தியதால் பிரிம் அதன் உற்பத்திகளை வர்த்தகத்திற்கு உட்படுத்துவதோடு பிரிமின் நடவடிக்கை தொடரும் வண்ணம் வருமானம் ஈட்டும் வகையில் சொந்தமாக நிறுவனமும் அமைத்துக் கொள்ளலாம்.

இந்த வர்த்தமயமாக்கும் முயற்சியின் மூலம் அரசின் நிதியை சார்ந்திருப்பதை குறைத்துக் கொண்டு இன்னும் 5 ஆண்டுகளில் சுயமாக வருமானத்தை ஈட்டிக் கொள்ளும் நிலையை பிரிம் அடையும் என்று எதிர்பார்க்கப்படுவதாக வான் ஜூனாய்டி மேலும் கூறினார்.

Powered by: iSENTIA